# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை - 2015
## தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் - 10** **நேரம் : 2.00 மணித்தியாலங்கள்**

சுட்டெண்: ..........................................

புள்ளிகள் : / 100

## பகுதி III

**ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
**01, 02, 03, 04 ஆகிய வினாக்களுக்கும் 05, 06, 07 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**

**01) சுருக்கமான விடை தருக**

1) அ) நாட்டார் பாடல் என்றால் என்ன?
ஆ) நாட்டார் பாடல்கள் வேறு எப்பெயரால் அழைக்கப்படுகின்றன?

2) அ) திருக்குற்றாலக் குறவஞ்சி யாரால் இயற்றப்பட்டது?
ஆ) இந்நூலின் பாட்டுடைத் தலைவி யார்?

3) "எது நல்ல சினிமா" என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்?

4) குகப்படலத்தில் இடம்பெறும் பாத்திரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

5) அ) "பங்கப் பழனத் துழுமுழவர் ....... " என்ற பாடலைப் பாடிய புலவர் யார்?
ஆ) பழனம் என்பதன் பொருள் யாது?

6) கணிப்பொறியால் ஏற்படும் நன்மைகள் மூன்று தருக.

7) 'ஐய அன்பின் நிறைந்தாளை உரை..." இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

8) சினிமா மொழியின் மூன்று அம்சங்களும் எவை?

9) இலங்கை சட்டசபைக்கு நியமனம் பெறுவதற்காகப் போட்டியாளராக விளங்கியவர்கள் யாவர்?

10) அ) வாக்குண்டாம் பாடலில் கொக்கின் இயல்பு யாது?
ஆ) அதற்கு யாரை உவமித்துள்ளார்?

(20 புள்ளிகள்)

**02)** **பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.**

அ) சுற்றத்தார் தேவரொடுந் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத் தார்க் குரிசிலலவ ராரென்ற? என்று
குகன் வினவக் **கோக்கள் வைகு**
**முற்றத்தான்** முதற்றேவி மூன்றுலகு
மீன்றானை முன்னீன்றானைப்
பெற்றத்தாற் பெறுஞ் செல்வம் யான் பிறத்த
லாற்றுறந்த பெரியா ளென்றான்.

ஆ) **கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே**
மிக்காரைச் சேர்தல் மிகமான முன்இனிதே
எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது.

இ) **சினிமா மொழி நமக்குப் பரிச்சயமில்லாத ஒன்றாக இருக்கிறது. மற்ற நாடுகளில் இம் மொழி வளர்ந்து கொண்டிருக்கிறது.** அங்கிருந்து வரும் நல்ல சினிமாவை நாம் அனுபவிக்க முடியாததற்கு நம் பரிச்சயமின்மைதான் காரணம். சினிமா மொழி மொழிபெயர்க்க முடியாத ஒன்று. அது மனித குலத்திற்கே பொதுவானது.

ஈ) முதல் நாளே நான் ஒரு பெரிய உண்மையைக் கண்டுபிடித்தேன். **கணிப்பொறி என்பது ஒரு இராட்சத வேலைக்காரன் சொல்லும் வேலைகளை எல்லாம் கச்சிதமாகச் செய்யும்.** ஆனால் தவறான கட்டளைகளைப் பிறப்பித்து விட்டாலோ தானே எயமானன் ஆகிவிடும். பிறகு நீங்கள் அதற்கு அடிமைதான். இன்னொன்று பயந்து பயந்து இதை அணுகினால் அது எட்ட எட்டப் போய்விடும்.

(20 புள்ளிகள்)

**03)** குகப்படலத்தை அடிப்படையாக் கொண்டு,
- அ) கம்பர் காட்டும் குகனின் குணாம்சங்கள்
- ஆ) கைகேயியை பரதன் குகனுக்கு அறிமுகம் செய்தல் என்பவற்றை விளக்குக.

**அல்லது**

கம்பியூட்டர் சிறுகதையில்,
- அ) தலைப்பின் பொருத்தப்பாடு
- ஆ) இலக்கியச் செய்திகளும் சந்தர்ப்பங்களும்
- இ) மொழிநடை

என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

**04)** எது நல்ல சினிமா என்ற கட்டுரையில்
- அ) சினிமா பற்றிய கட்டுரையாசிரியர் கருத்து
- ஆ) நல்லதொரு சினிமாவில் உள்ளடங்குபவை
- இ) சினிமா நாடகத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது என்பதற்கு கட்டுரையாசிரியர் கூறும் காரணங்கள் என்பவற்றை விளக்குக.

**அல்லது**

குற்றாலக் குறவஞ்சியை அடிப்படையாகக் கொண்டு
- அ) மலையின் சிறப்புக்கள்
- ஆ) குற்றாலக் குறவஞ்சியின் அமைப்பு

என்பவற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

**05, 06, 07 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

**05)** மீனவர் பாடல், காதல் பாட்டு என்பவற்றில் நாயகன் நாயகி மீது கொண்ட காதல் உணர்வை எடுத்துக்காட்டுக.

(10 புள்ளிகள்)

**06)** "நாவலர் எழுந்தார்" என்ற கட்டுரையில் நாவலரின் திறமை, நேர்மை என்பவற்றை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)

07) பங்கப்பழனத்து உழுமுழவர் என்ற பாடலை அடிப்படையாகக் கொண்டு

அ) சோழநாட்டின் சிறப்பு

ஆ) சோழனின் வீரம்

இ) "வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும் மெலிந்தப் பிறைக்கும் விழிவேலோ"
இவ்வடிகளில் உள்ள மூன்று பிறைகள் பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education